**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 178/2022**

**பி.வா.சா.1 - ரவிச்சந்திரன்** **25.11.2024**

**குறுக்கு விசாரணை :-**

நான் தூதை அரசு நடுநிலைப்பள்ளியில் ஆங்கில பட்டாதாரி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான்தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கும் எனது நிரூபண வாக்குமூலத்திற்கும் வழக்குரைஞருக்கு நான் தான் தகவல் கூறினேன். அதில உள்ள விவரங்களை படித்து பார்த்து சரியாக இருந்த பின்னர் நான் கையொப்பம் செய்தேன். 20.08.2018 அன்று நான் வாங்கிய பணத்தை திரும்ப செலுத்தியதாகஎனது எதிர்வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

எந்த தேதியில் யார் முன்னிலையில் திரும்ப செலுத்தினேன் என்றால் 01.01.2021 அன்று யார் முன்னலையிலும் இல்லாமல் வாதியின் கணவர் தவம் என்பவரிடம் ரூ.100000/- கொடுத்தேன். வாதியின் கணவர் தவம் என்பவரிடம் ரூ.100000/- நான் கொடுத்தது பற்றி எனது நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்வழக்குரையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் மேற்படி விபரத்தை எனது எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக சொல்லியுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த தொகையும் வாதியிடமும் வாதியின் கணவரிடமும் திரும்ப செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வாதி எனக்கு கொடுத்த கடனை திரும்ப கேட்டு எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 என்றால் சரிதான்.

மேற்படி வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் வாதிக்கோ அவரது வழக்கறிஞருக்கோ பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் வாதியை சென்று நேராக சந்தித்துவிட்டதால் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பின்பு வாதியை நேரில் சந்தித்து நான்வாங்கியகடனுக்கு அசலையும வட்டியையும் கூடிய விரைவில் செலுத்தி வைப்பதாக கூறி அந்த தொகைக்கு ஈடாக கடந்த 05.04.2021 அன்று ரூ.172000/-க்கு வாதிக்கு கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் வாதிக்கு 05.04.2021 அன்று கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துவிட்டு தற்பொழுது வழக்கிற்காக



எழுதிக்கொடுக்கவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 05.04.2021 தேதிய கடனுறுதிச்சீட்டின்படி வாதிக்கு பணம் திரும்ப செலுத்தாததால் வாதி எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 தான் அந்த அறிவிப்பு என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். அசலையும் வட்டியையும் வாதிக்கு திரும்ப செலுத்திய பின்பு கூடுதல் பணம் கேட்டு எனது நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்வழக்குரையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அது சம்மந்தமாக காவல் துறையில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அசலையும் வட்டியையும் செலுத்திய பின்பு வாதி கடனுறுதிச்சீட்டை திரும்ப தர மறுக்கிறார் என காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வாதிக்கு வட்டி செலுத்தியதை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆவணம் எனது கைப்பேசியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ.1 ஆவணம் எந்த கம்ப்யூட்டர் சென்டரில் பதிவிறக்கம் செய்யப்பட்டது யாரால் செய்யப்பட்டது அது சம்மந்தமான சான்றிதழ் எதுவும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்துடன் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பணம் எந்த வகைக்காக அனுப்பப்பட்டது என்ற விபரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். மேலும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பணம் வட்டிக்காக செலுத்தப்பட்டது என்று எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணம் எனது பள்ளியின் தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்று தாக்கல் செய்துள்ளேன். எனது தலைமை ஆசிரியடமிருந்து பி.வா.சா.ஆ.2 ஆவணம் பெறப்பட்டது என்பதற்கான மேற்குறிப்பு எதுவும் மேற்படி ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் எனது வக்காலத்து எனது எதிர்வழக்குரை வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு வா.சா.ஆ.3 கடனுறுதிச்சீட்டு ஆகியவற்றிலுள்ள

கையொப்பம் என்னுடையது தான். நான் வாதியிடம் கடன் பெற்றுவிட்டு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துவிட்டு அதன்படி அசலையும் வட்டியையும் வாதிக்கு திரும்ப செலுத்தாததால் வாதி அசலையும் வட்டியையும் பெறுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் நான் வாதிக்கு எழுதிக் கொடுத்த பிராமிசரி

..3..

நோட்டின்படி அசலையும் வட்டியையும் வாதிக்கு திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை